சிறந்த முறையில், விரும்பிய வகையில் தரமாகவும் உரிய நேரத்திலும் தையல் வேலைகளைச் செய்து கொடுப்பவர்கள்
குமார் தையலகம்
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

நட்டின் வகைகளை ஒரே இடத்தில் பெற்று உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு தைத்துக் கொள்ள நாடுங்கள்
குமார் தையலகம்
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 12 சனிக்கிழமை (29 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 338

# காமினியின் இறுதி ஊர்வலத்தை முன்னிட்டு
# கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

## மரணச் சடங்கை குழப்ப தீய சக்திகள் முயற்சி

### சிறிமா திஸாநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஒக். 29

தனது கணவரின் மரணச் சடங்கின் போது அமைதியாக நடந்து கொள்ளுமாறு திருமதி சிறிமா திஸாநாயக்கா நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

மறைந்த தமது கணவரின் மணரச் சடங்கைக் குழப்புவதற்கு சில தீய சக்திகள் முயற்சிகளை எடுத்து வருவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்தும், நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்தும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார். (இ ஐ)

### தேர்தலில் போட்டியிடும் கட்சிகள்

## பிரசாரக் கூட்டங்களை நடத்துவதில்லை எனமுடிவு

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி பிரசாரக் கூட்டங்கள் எதனையும் நடத்துவதில்லை என்று இத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் அனைத்தும் தீர்மானித்துள்ளன

கொழும்புப் பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டன அரசியல் கட்சிகளின் இம் முடிவை, இத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஏ. ஜே. ரணசிங்க வரவேற்றுள்ளார், — — (ஐ-எ- 4)

### கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு

## சவச்சாலையில் இருந்து சடலத்தை கடத்த முயற்சி

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்து அடையாளங் காணப்படாத நிலையில் பொலீஸ் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரு சடலங்களில் ஒன்றை அகற்றிச்செல்ல இரு நபர்கள் முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் பற்றி விசாரணை நடத்தும் கொழும்பு பிரதம நீதிவான் சம்பா புதிபால, இக் கடத்தல் முயற்சிச் சம்பவம் பற்றி விசாரிக்கும்படி இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். [ஐ-எ-4]

## புலனாய்வு ஆலோசனை புறக்கணிக்கப்பட்டது!

### கூட்ட ஏற்பாட்டாளரின் தவறு

கொழும்பு, ஒக். 29

புலனாய்வுத்துறையினர் வழங்கிய பாதுகாப்பு ஆலோசனைகளை காமினி திஸாநாயக்கா கடைசியாகக் கலந்து கொண்ட கிராண்ட்பாஸ் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் புறக்கணித்து விட்டனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" இச்செய்தியை வெளியிட்டது.

கூட்டமேடைக்கும் மக்களுக்கும் இடையே குறிப்பிட்ட அளவு தூரம் இடைவெளி விடப்படவேண்டும் என்று புலனாய்வுப் பிரிவினர் கூறிய ஆலோசனையை மீறி கிராண்ட்பாஸ் கூட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## தற்கொலை தாக்குதலை பெண் ஒருவரே நடத்தினார்

### பொலீஸ் திணைக்களம் அறிக்கை

கடந்த ஞாயிறு இரவு நடைபெற்ற கிராண்ட்பாஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் காமினிதிஸாநாயக்கா உட்பட சுமார் 60 பேர் கொல்லப்படுவதற்கு பெண் ஒருவரின் தற்கொலைத் தாக்குதலே காரணம் என்று பொலீஸ் திணைக்களம்நேற்று மாலை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிறம், சுமாரான உயரம் உடைய பிரஸ்தாப பெண் 25 வயது மதிக்கக்கூடியவர் என்றும் —

அவர் தனது உடலில் குண்டை மறைத்து வைத்துக் கொண்டு வந்து கூட்ட மேடைக்கு அருகில் வைத்து வெடிக்க வைத்தார் என்றும்— அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சந்திரிகாவுக்கு கலப்பதி ஆதரவு

கொழும்பு, ஒக் 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் பிரதமர் சந்திரிகாவுக்கு ஆதரவளிக்குமுகமாகவே தாம் போட்டியில் இருந்து வாபஸ் பெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிஹால் கலப்பதி அறிவித்துள்ளார். (இ-4)

## வன்செயல் வெடிக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஒக்ரோபர் 29

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பு கிராண்ட்பாஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து கொலை செய்யப்பட்ட ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறுகின்றன.

இறுதிச் சடங்குகளை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வன்செயல்கள் வெடிக்கலாம் என அஞ்சப்படுவதால் பெரும் அளவில் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளன.

காமினி திஸாநாயக்காவின் சடலம் இன்று பிற்பகல் 2 மணி வரை மகாவலி கேந்திர நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். பின்னர் இறுதி ஊர்வலம் அங்கிருந்து ஆரம்பமாகும்.

பிற்பகல் 4 மணியளவில் ஊர்வலம் சுதந்திர சதுக்கத்தைச் சென்றடையும்.

இறுதி ஊர்வலம் இடம் பெறும் வீதிகளில் வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருக்கும்.

இதற்கிடையில் குண்டு வெடிப்புச் சம்பவத்தை வைத்து மக்களுக்கு எதிரான வன்செயல்களில் ஈடுபட சில தீய சக்திகள் முயற்சித்து வருகின்றன என்றும் —

இது குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா எச்சரிக்கை விடுத்துள்ளார். [இ-எ-ஐ]

### கொழும்பு பஞ்சிகாவத்தையில் நடந்த

## காமினியின் முதல் பிரசாரக் கூட்டத்தில் கொலையாளியும் கலந்துகொண்டார்?

### அடையாளம் காட்டும் வீடியோ நாடா ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 29

காமினி திஸாநாயக்காவை ஆதரித்து பஞ்சிகாவத்தையில் நடந்த முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இரு வீடியோ கஸட்டுக்களை ஐ. தே. க. பிரமுகர் ஒருவர் நேற்று கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள பி. பி. ஸி. செய்தியாளர்களிடம் ஒப்படைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிராண்ட்பாஸ் கூட்டத்தில் மேடையின் முன்வரிசையின் காணப்பட்ட — மனித குண்டாகச் செயற்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் — பெண், பஞ்சிகாவத்தைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதை இந்த வீடியோ கஸட் காட்டுவதாக அவர் பி. பி. ஸி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிராண்ட்பாஸ் சம்பவத்தை அடுத்து கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் தலையும் பஞ்சிகாவத்தைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்ணையும் ஒப்பிட்டுப் பார்த்த போது, இரு பெண்களும் ஒரே நபர் என்பதில் ஒற்றுமை தெரிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. செய்தியாளர்களிடம் சம்பந்தப்பட்ட விடியோ நாடாக்களை ஒப்படைத்தவர், காமினி திஸாநாயக்காவின் இறுதிச்சடங்குகளை ஒழுங்கு செய்து வரும் ஐ. தே. க. பிரமுகர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும்— வீடியோ படத்தில் காணப்படும் பெண்ணும், கிராண்ட்பாஸில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் தலையும் ஒருவருடையதா என்பது நிபுணர்களினால் உறுதி செய்யப்படவேண்டிய விஷயமாகும் என்று பி. பி. ஸியின் சிங்களச் சேய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ-எ-6)

### முச்சந்தி முரளி



அப்ப சந்திரிகா — கலப்பதி நாடகம் முடிந்து போச்சு என்று சொல்லுங்கோ...!

## காமினியின் இறுதி ஊர்வலம் நேரில் ஒளிபரப்பு செய்யப்படுமா?

### ரூபவாஹினி ஊழியர் படம் பிடிக்க அச்சம்

கொழும்பு, ஒக். 29

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 77 ஊழியர்கள், தங்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்குமாறு கோரி மகஜர் ஒன்றை ரூபவாஹினித் தலைவரிடம் கையளித்துள்ளனர்.

இது குறித்து ரூபவாஹினித் தலைவர் திரு. செந்தராஜா கருத்துத் தெரிவிக்கையில் ரூபவாஹினி ஊழியர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்க முடியுமா என்பது தெரியவில்லை என்று தெரிவித்தார்

ஊழியர்கள் அஞ்சுவதால் இறுதி ஊர்வலத்தை நேரடியாக அஞ்சல் செய்வது பிரச்சினையாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஐ. தே.க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக் கூட்டம் ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு படம் பிடிக்கச் சென்ற ரூபவாஹினி கமெராக்காரர்களும், அறிவிப்பாளர்களும் தாக்கப்பட்டது தெரிந்ததே.

இதனை அடுத்தே இவர்கள் போதிய பாதுகாப்பு இன்றி படம் பிடிக்கச் செல்ல தயங்குகின்றனர்.

## வன்செயலை பாரதூரமாக கருதினால் எவராலுமே பேச்சு நடத்த முடியாது

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

சமாதானப் பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் உலகின் ஏனைய பாகங்களில் வன்செயல்கள் இடம்பெறவில்லையா?

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் பிரதமருடன் பங்குபற்றிய செய்தியாளர் மாநாட்டின் முன்கண்டவாறு சொன்னார்.

இஸ்ரேல் — பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான சமாதானப் பேச்சுகள் நடைபெறும் போதும் இத்தகைய இந்தவிதமான வன்செயல்கள் இடம்பெறவில்லையா? இவற்றைப் பாரதூரமாகக் கருதுவதினால் உலகில் எங்குமே, எவராலும் சமாதானப் பேச்சுகளை நடத்த முடியாது.

சகல பேச்சுகளும் சமாதானம் என்ற ஒரேஒரு குறிக்கோளை நோக்கமாகக் கொண்டதாகவே அமைந்திருக்க வேண்டும் என்றும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார். (இ-எ)

## கிழமையில் 4 நாட்கள் கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக் 24

கிளாலி—பூநகரி படகுச் சேவை இனிமேல் வாரத்தில் நான்கு நாட்கள்-செவ்வாய், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில்-வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

கிளாலி நீரேரியூடாக கூடுதலான மக்கள் பயணம் செய்து வருவதால் அவர்களின் வசதி கருதி இந்த ஏற்பாடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

தீபாவளியை முன்னிட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை விசேட படகுச் சேவை வழமையான நேரத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது [ஐ-9]

## தேர்தல் வாக்குச் சீட்டில் காமினி பெயரே இருக்கும்

கொழும்பு, ஒக். 29

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்கும் போது சில அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு தேர்தல் ஆணையாளர் வாக்காளர்களுக்கு அறிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவின் பெயர் வாக்குச்சீட்டில் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளது. எனவே ஐ. தே. கவின் புதிய ஜனாதிபதி வேட்பாளர் திருமதி வஜிரா சிறிமா திஸாநாயக்காவுக்கு வாக்களிப்போர் வாக்குச் சீட்டில் திரு. காமினி திஸாநாயக்காவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களையே பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை — ஜனாதிபதித் தேர்தலில் இருந்து முற்போக்கு முன்னணி வேட்பாளரான திரு. நிஹால் கலப்பதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் கட்சித் தலைவராக நேற்று ஏகமனதாக தெரிவு

கொழும்பு, ஒக். 29

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் காமினி திஸாநாயக்காவின் மறைவுக்குப் பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக முன்னை நாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை எதிர்க் கட்சி நாடாளுமன்றக் குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முழு அதிகாரத்தையும் நவம்பர் 9 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதிதேர்தலுக்கு பிறகு ரணில் விக்கிரமசிங்காவிடம் தாம் ஒப்படைப்பதாக பல நெருக்கடிகளுக்கிடையில் அதிபர் விஜேதுங்கா கையெழுத்திட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## பதுங்கியிருந்து தாக்கிய படையினருடன் மோதல்!

### ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக் 29

திருமலை மாவட்டத்தில் இத்திக்குளம் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் மீது படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

படையினர் நடத்திய இத் திடீர்த் தாக்குதலை அடுத்துப் புலிகள் பதில் தாக்குதலை நடத்தினர்.

பதுங்கியிருந்த படையினரை சுற்றிவளைத்துப் புலிகள் தாக்கினர்.

புலிகளின் எதிர்த் தாக்குதலை அடுத்து படையினர் இராணுவத் தளபாடங்களைக் கைவிட்டுத் தப்பி ஓடினர். புலிகள் கைப்பற்றிய இராணுவத் தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ 44 மி.மீ. ஷெல்கள் | — 02 |
| ★ தொடர் ரவை | — 73 |
| ★ நேட்டோ ரவை | — 07 |
| ★ எம். 15 ரக குண்டு | — 01 |
| ★ மழைக் கவசம் | — 01 |
| ★ தண்ணீர் கொள்கலன் | — 01 |
| ★ கத்தி | — 01 |
| ★ தொப்பி | — 02 |

இத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. (ஐ-4)

## கொழும்பு "லொட்ஜ்களில்" படையினர் தீவிர தேடுதல்

### இருவர் மீது சந்தேகம்

கொழும்பு, ஒக். 29

கொழும்பில் உள்ள "லொட்ஜ்களில்" மீண்டும் பாதுகாப்புப் படையினர் தேடுதல் சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

நள்ளிரவு வேளையில் செல்லும் படையினர் விடுதிகளில் தங்கியிருப்போரை ஒவ்வொருவராக அழைத்து அவர்களிடம் பெயர் ஊர் விவரங்களை கேட்டு அறிவதுடன் கொழும்பில் வந்து தங்கியிருக்கும் நோக்கம் குறித்தும் விசாரித்து வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைக்க உகந்த சில்க்கி, பாபடிகல்ஸ், போலிஸ், சில்வர், பாமாஸ், ஜாவாபன்டம்முட்டைகளும், ஒரு வாரக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. இல. 1, தவக்குமார் வீதி, மடத்தடி (தாபி அருகில்),சங்கத்தானை, சாவகச்சேரி. (33517)

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், இணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

கண்ணாடி சோகேஸ் (கடை), மெத்தைகள், கட்டில்கள், சோக்கேஸ், வாங்குகள், பிரம்பு கூடைகள் விற்பனைக்கு உண்டு. கதிரைகளும் பின்னி கொடுப்பவர்கள்: ராஜன் பின்னல் அகம், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-9542)

மர முந்திரி விதைகள் (கஜு), சுத்தமான இலுப்பெண்ணெய், தேன், ஒரு பெரிய திருக்கை வண்டில், பான்டெயில் புறாக்கள் விற்பனைக்குண்டு. ந. வரதராசா, ராஜ்கோபால் களஞ்சியம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (33549)

### மலிவு விற்பனை

3ஆம் தவணைப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3இல் இருந்து O/L வரை அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) 50 வீதம் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7988)

### தேவை

சிங்கப்பூரில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய இந்து சமய பொறியியலாளர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிகள் செய்ய சமையல் அனுபவம், சுத்தம், சுபாவம் ஆகியவை உள்ள பெண் தேவை. மாதச் சம்பளம் 1000/- விமானச்சீட்டு இலவசம். பெயர் சரியான விலாசம் குறிப்பிட்டு உடன் தொடர்பு: இல. 711, உதயன், யாழ்ப்பாணம். (33474)

சுன்னாகத்திற்கு புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஓர் ஐஸ்கிறீம் கொம்பனிக்கு அனுபவம் உள்ள ஓர் பங்காளர் தேவை. பில் கிளாக் பரிமாறுவோரும் தேவை. நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். மே/பா 38, மே/பா 82, உதயன் சேவை நிலையம், சுன்னாகம். (7687)

### தவறிவிட்டது

24-10-94 அன்று பெருமாள் கோயிலுக்கும் செம்மணி வீதிக்கும் இடையில் அடையாள அட்டை, பென்சன் வவுச்சர், வங்கிப் புத்தகம் ஆகியன அடங்கிய ஒரு பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 95, நாயன்மார் வீதி, நாயன்மார்கட்டு என்னும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். (33546)

### SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature ஆரம்பம் 29-10-94 சந்திக்கும் நேரம் காலை 8-00 மணிக்கு முன்பு V. N. Kandasamy A. I. B. Part I (London), Inter (London) Dip-in-English 87, திருநெல்வேலி றோட், ரயில் கடவைக்கு சமீபமாக கொக்குவில். (7983)

### தெய்வீக மூலிகைகள்

மூலிகைகள் வளர்த்தெடுக்கச் சாதகமான பருவம், முடக்கொத்தான், கரிசிலாங்கண்ணி புதினா அரிய மூலிகைக் கன்றுகள் விற்பனைக்குண்டு. கன்று ஒன்று விலை ரூபா 10/- மட்டுமே. மில்க்வைற் சவர்க்கார மேலுறை/சலவைத்தாள் பக்கற் 10 சேர்ப்பித்தும் கன்று வாங்கலாம். ''மில்க்வைற்'' (சி-9558)

### றோணியோ, தட்டச்சு

மிகத் தெளிவான எழுத்துப் பிழைகளற்ற தத்ரூபமான படங்களுடன் (தமிழ், ஆங்கிலம்) Stencil கட்பண்ணி றோணியோ வேலைகளை குறித்த தவணையில் செய்து தர Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7989)

## கலை, வர்த்தக கல்லூரி

**C. C. A.**

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

யாழ்ப்பாணம்.

**A/L 1994**இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:

**30-10-1994**

சனி, ஞாயிறு வகுப்பு

| | |
|---|---|
| கணக்கியல்: | 1 - 3 |
| அளவையியல்: | 3 - 4 |
| வர்த்தகர்: | 4 - 5 |
| பொருளியல்: | 5 - 6 |

-நிர்வாகி.

(சி/9540)

### பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33496)

## விக்னா

கல்வி நிறுவனம்

**94** பரீட்சை எடுத்தவர்களுக்கு

**95** மீட்டல்

ஆரம்பம்:

**30-10-1994**

(Sun.)

Geo. திரு. குணராஜா 7-00 — 8-00

Tam. திரு. குழந்தை 12-00 — 1-00

Hi.C. திரு. காரை-சுந்தரம்பிள்ளை 8-00 — 9-00

Log. திரு. விக்கி 9-00 — 10-00

Eco. திரு. லோகசிங்கம் 10-00 — 11-00

(சி/9558)

## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பதில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடையவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொழில் திறன் மற்றும் நற்சான்று அத்தாட்சிப் பத்திரங்களுடன் 01-11-94 செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகாமையாளர்(ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## "A" LEVEL CENTRE

Point-Pedro First Lane,
Jaffna.

★ விசேட சிங்கள வகுப்பு ★

ஆரம்பம்: **01-11-1994**

Tue, Thu – 4-30

[சி-9543]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

சுன்னாகம் சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணேசர் திருவருளால் நிகழும் மங்களகரமான பவ வருடம் ஐப்பசி மாதம் 14ஆம் நாள் (31-10-1994) திங்கட்கிழமை பகல் 11-40 மணி தொடக்கம் 1-30 மணி வரையுமுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புதல்வன் | எனது கனிஷ்ட புதல்வி |
| **ரவிசங்கர்** | **சுதேஸ்வரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்திருக்கும் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும் மங்களநாண் பூட்டும் மணவினைத் திருநாளில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து, மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

01 — 11 — 1994 இல் மணமகன் இல்லத்தில் கொண்டாட்டம் நடைபெறும்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. திருமதி | திருமதி |
| வே. கு. பாலசிங்கம், | இராசலிங்கம் இராசம்மா, |
| (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் கல்வித் திணைக்களம்), | 126/34, ரதீஸ்வரன் வீதி, |
| ''ஈஸ்வரி இல்லம்'', | கச்சேரி நல்லூர் றோட், |
| வெளிப்புலம், சுன்னாகம், | யாழ்ப்பாணம், (இலங்கை) |
| (இலங்கை) | (சரவணை மேற்கு, சரவணை.) |

(இரு வீட்டார் அழைப்பு)

[சி-7557]

உ
சிவமயம்

திரு. திருமதி முருகையா இரத்தினேஸ்வரி தம்பதிகளின்
அன்புப் புதல்வனும்
மிருதங்க வித்துவான் லயஞானமணி
**ம. கந்தசாமி அவர்களின்**
மாணவனுமாகிய



## செல்வன் முருகையா கஜேந்திரராஜ்

அவர்களின்

# ★ மிருதங்க அரங்கேற்றம் ★

இடம்: அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயண தேவஸ்தானம் அளவெட்டி மேற்கு.

காலம்: **29-10-1994** சனிக்கிழமை மாலை 4 மணி

பிரதம விருந்தினர்: அருட்கவி சி. விநாசித்தம்பி புலவர் அவர்கள்

சிறப்புரையாளர்: பிரம்மஸ்ரீ அ. நா. சோமஸ்கந்தசர்மா அவர்கள் [விரிவுரையாளர் (மிருதங்கம்), நுண்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம்]

அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி முருகையா தம்பதிகள்

அளவெட்டி மேற்கு. (33516)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிதிக்காக **1994-10-30** ஆம் திகதி பி.ப 6-00 மணிக்கு நடைபெறவிருந்த ''கலைத்தென்றல்'' நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந் நிகழ்வு நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

நிறைவேற்றுக்குழு,
பழைய மாணவர் சங்கம்.

யா/ நெல்லியடி ம.ம.வி,
கரவெட்டி. (7985)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

### சத்தியரூபா குணநாயகம்

திதி: 29 — 10 — 1994

மகளே! குலவிளக்கே! மங்களமாய் வாழ்ந்தவளே
மனதாற வில்லையடி நீ மனை பிரிந்த நாள் முதலாய்
தங்கையே தங்கமே தவித்திருக்க வைத்தாயே.
தஞ்சமென வந்தவனை தடுமாற வைத்துவிட்டு,
சேர்ந்தவனை, உடன்பிறந்தவரை, உற்றாரை, நீ பிரிந்து
ஈர்மூன்றாண்டுகளா! இக்கணம் போல் இருக்குதம்மா
இறை பாதமடைந்து இசையோடு இனிதிருக்க-
உன் இழப்பால்
இங்கிருப்போர் படுந்துன்பம், இறையருளும்-
உணர்ந்திடுமோ.

தாய், சகோதரங்கள்,
உறவினர்கள்,

46/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, (33553)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தின்
திரைப்படப் பிரிவு
நிதர்சனத்துடன்
இணைந்து நடத்தும்
திரைப்படத் தயாரிப்பு பற்றிய

## ஐந்து நாள் பயிற்சிநெறி

திரைப்படத்துறையில் நாட்டங் கொண்ட கலைஞர்களின் நலன் கருதியும், புதியவர்களை உருவாக்கும் நோக்குடனும் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறி பின்வரும் விடயங்களை உள்ளடக்கி நடைபெற உள்ளது.

1. திரைப்படப் பிரதியாக்கம்
2. திரைப்பட நடிகர் தேர்வும், திரைப்பட நடிப்பும்
3. அரங்கமைப்பு
4. ஒப்பனை
5. படப்பிடிப்பு
6. படத்தொகுப்பு
7. திரைப் படத்தில் ஒலியமைப்பு
8. இசையமைப்பு
9. சினிமா ஒரு பார்வை

மேற்படி பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும், மேற்படி துறையில் ஆர்வங் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் அந்தந்த கோட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதங்களுடன் எதிர்வரும் 05 ஆம் திகதிக்கு முன்னராக தங்களின் விண்ணப்பங்களை பொறுப்பாளர், திரைப் படப் பிரிவு, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், நடுவப்பணியகம், தமிழீழம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்.

திரைப்படப் பிரிவு,
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப்பணியகம்,
தமிழீழம். [சி-9559]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி அன்னம்மா சுப்பையா

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| **01-01-1911** | **09-11-1993** |

திதி: **29-10-94**

எம் அன்புத் தெய்வமே!

எம்மை விட்டு நீங்கள் பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவோடு நாம் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

35/1, G. P. S. வீதி,
கல்வியங்காடு. (33559)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

BRITH:
12-03-1916

DEATH:
29-10-1991



### PHILIP LIGORY SANTIAGO

(Retd. Asst. Conservator of Forests)

"We have Loved him in Life
Let us not forget him in death"

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

45/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (33554)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஐ. தே. கவுக்கு வெற்றி

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் சந்திரிகா அறிவித்து விட்டார்.

முதற்கட்டப் பேச்சுவார்த்தை மீது ''கண்ணூறு'' பட்டது போல, இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடப்பதற்கு எட்டரை மணித்தியாலங்களுக்கு முன்னர் கொழும்பு கிராண்ட்பாஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, முகிழ்த்து வந்த சமாதான மொட்டை மலராகு முன்னர் கருக்கிவிட்டது. விடிந்தால் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை என்ற நம்பிக்கை, இப்போது அவநம்பிக்கையாகி, சமாதானப் பேச்சு இனி எப்போது; நடக்குமா என்ற கேள்வியோடு நிற்கிறது!

இத்தனைக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை. சமாதானப் பேச்சில் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்தினரும், விடுதலைப் புலிகளும், குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள்; அவர்களில் பிரதானமானவர் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட காமினி திஸாநாயக்கா.

சமாதானப் பேச்சுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனினும், அவர்கள் குண்டுவெடிப்பைப் பயன்படுத்திப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதில் வெற்றி கண்டுவிட்டார்கள்!

பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருந்தவர்கள் போல, குண்டுவெடிப்பு மரணங்களைத் தமக்குரிய கூரிய ஆயுதமாக்கிக் கொண்டு விட்டனர். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலமாகையால், சந்திரிகாவும், அவரது அரசாங்கத்தினரும், ஐ. தே. கவின் அந்தக் கூரிய ஆயுதம் தம் மீது பாயாது தடுப்பதற்கு, சமாதான முயற்சியையே பலி கொடுக்க வேண்டியதாயிற்று!

காமினி மற்றும் ஐ. தே. கட்சி அரசியல் வாதிகளை விடுதலைப் புலிகளே கொன்றார்கள் என்று எவ்வித ஆதாரமும் இல்லாமல் வெறும் கற்பனையிலும் ஊகத்திலும், ஏன், வேண்டுமென்றே குற்றஞ்சாட்டினர். அதன் மூலம் சந்திரிகாவைப் 'பயமுறுத்தி' பலவீனமாக்கி பேச்சுவார்த்தையைக் குழப்பும் தமது நோக்கத்தைச் சாதித்துவிட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தப்பித்தவறியும் காமினி வென்று விடக்கூடாது என்பதற்காக, விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகாவே பணம் கொடுத்து காமினியைக் கொல்வித்தார் என்ற அபாண்டமான குற்றச்சாட்டை ஐ. தே. கவினர் சோடித்தனர். அதனைத் தென்னிலங்கையின் நகரங்கள் கிராமங்கள் எங்கும், மூலை முடுக்கெல்லாம், கை எழுத்துச் சுவரொட்டிகள் ஆக்கினார்கள்.

விடுதலைப் புலிகள்தான் கொலைகளைச் செய்தார்கள் என்ற முந்திய அம்பைவிட சந்திரிகாவும் புலிகளும் சேர்ந்துகொன்றார்கள் என்ற ஈர்முனை ஈட்டியைக் கண்டு சந்திரிகா நடுநடுங்கிப் போனார்! எவ்வித ஆதரமும் இன்றி சமாதானப் பேச்சின் பங்காளர்கள் இருசாரார் மீதும் குற்றம் சுமத்தி பேச்சுவார்த்தையைச் குழப்பும் தமது நோக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் எய்திவிட்டனர்.

சமாதானப்பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் என்ற சீட்டைக் காட்டி, சந்திரிகா வாக்குத் தேடுவதையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் சாதுரியமாகத் தடுத்து விட்டனர். ஆகவே குண்டு வெடிப்பைப் பயன்படுத்தி, அதனையே ஈர்முனை ஈட்டியாக்கிக் காட்டி அந்த ஓர் அம்பினாலேயே இரு கனிகளைப் பெற்று விட்டனர். அந்தளவில் ஐ. தே. கவினருக்கு வெற்றிதான்.

பொய்களையும், ஆதாரமில்லாத குற்றச் சாட்டுகளையும் நம்பி உணர்ச்சி வசப்படும் மக்கள் இருக்கும் வரை, அவற்றை முதலீடாகக் கொண்டு அரசியல்வாதிகளும் தமதுநோக்கங்களில் வெற்றி அடையவே செய்வர்.

---

### வடபகுதி படைத் தளங்களில் இருந்து

# பெருமளவு கொமாண்டோ படையினர் அவசரமாக கொழும்புக்கு விரைவு!

கொழும்பு, ஒக். 29

வட பகுதியில் உள்ள இராணுவ தளங்களில் இருந்து ஆயிரக் கணக்கான கொமாண்டோ படையினர் விமானங்கள் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பலாலியில் இருந்து இப்படையினர் அவ்ரோ மற்றும் சினரகவை -8 விமானங்கள் மூலம் அனுராதபுரத்துக்கு முதலில் அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து கொழும்புக்கு அவர்கள் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—பலாலி இராணுவ தளத்தில் நிலை கொண்டுள்ள குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் இராணுவ அணியைச் சேர்ந்த 320 படையினர் விமானங்கள் மூலம் கொழும்புக்கு கடந்த திங்கள் இரவு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

### வீரசிங்கமல்லிமாராச்சிக்கு பதிலாக

# இ. தொ. காங்கிரஸ் பிரமுகரான யோகராஜன் எம். பியாக தெரிவாவார்

### நாடாளுமன்றில் இ. தொ. காவின் எம். பிக்கள் 8 பேர்!

கொழும்பு, ஒக். 29

கொழும்பு மாவட்டத்தில் இருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. ஆர். யோகராஜன் நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை கடந்த ஞாயிறு இடம்பெற்ற கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதல் சம்பவம் உருவாக்கி இருக்கின்றது.

அச்சம்பவத்தில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து ஐ. தே. கட்சி எம். பியாக விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீரசிங்கமல்லிமாராச்சி கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

அதனால் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஐ. தே. க. பட்டியலில் அடுத்த அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற வகையில் திரு. ஆர். யோகராஜன் எம். பியாக நியமிக்கப்படும் தகுதியைப் பெற்றுள்ளார்.

ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட இ. தொ. கா. உறுப்பினர் இவர் ஆவார்.

மேல்மாகாண சபை உறுப்பினரான இவர் எம். பியாவதுடன் நாடாளுமன்றத்தில் உள்ள இ. தொ. காங்கிரஸ் எம். பிக்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் ஐ. தே. கவுக்கு கட்டுப்படாத தனிக் குழுவாக இயங்குவதற்கு சபாநாயகர் கே. பி. இரத்தினாயக்கா அனுமதி வழங்கியுள்ளார் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

---

### நாடாளுமன்றத்தில்

## காமினியின் இடத்துக்கு ராஜபக்ஸ நியமனமாவார்

காமினி திஸாநாயக்கா இறந்ததால் நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு காமினி ராஜபக்ஸ என்பவர் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற வகையில் காமினி திஸாநாயக்கா எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பட்டியலில் அடுத்தபடியாக கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற வகையில் காமினி ராஜபக்ஸ என்பவர் எம். பியாக தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

இவர் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆவார். இது சம்பந்தமான அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் விரைவில் வெளியிட இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

## தலையில் மூன்றாம் தடவை ஒஸிக்கு சத்திர சிகிச்சை

### ஆபத்தானநிலையை தாண்டவில்லை

கொழும்பு, ஒக். 29

கொழும்பு மாவட்ட ஐ. தே. க எம். பி. ஒஸி அபய குணசேகராவுக்கு மூன்றாவது தடவையாக தலையில் அறுவைச் சிகிச்சை கடந்த புதன் இரவு மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது படுகாயமடைந்தவர்களில் இவரும் ஒருவராவார்.



இவரது உடல் நிலையில் சிறிதளவு முன்னேற்றம் தெரிவதாகக் கூறிய கொழும்பு பெரியாஸ்பத்திரியின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஒலிவர் பெர்னாண்டோ, அவர் ஆபத்தான நிலையை இன்னும் தாண்டவில்லை என்று தெரிவித்தார்.

24 மணி நேரமும் அவரின் உடல் நிலையை டாக்டர்கள் கண்காணித்து வருகின்றனர். (ஒ-எ)

---


## புலிகளின் குரல் வானொலியில்

**29 — 10 — 1994**

**சனி இரவு**

- ★ 8-01 — அறிவியல் கலசம்.
- ★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்.
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்.
- ★ 8-30 — செய்திகள்.
- ★ 8-40 — சித்திரம்— சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''சங்கத் தமிழில் புறநானூறு''

**30 — 10 — 1994**

**ஞாயிறு காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை.
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.


---

## புவியியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் விஞ்ஞானக் கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட க. பொ. த. உயர்தர வகுப்பில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். பல்கலைக் கழகப் புவியியற்றுறையில் எதிர்வரும் நவம்பர் 5ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகளின் அதிபர்கள் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூகப் பிரிவின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## கிரனேட் வீச்சில் கான்ஸ்டபிள் காயம்

கொழும்பு, ஒக். 29

வவுனியாவுக்கு அருகில் வைரவப் புளியங்குளம் பொலீஸ்காவல் நிலை மீது கடந்த ஞாயிறு இரவு 8. 30 மணியளவில் நடத்தப்பட்ட கிரனேட்தாக்குதலில் ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் உபாலி ஜயசேன காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## நகரில் தீபாவளி கலகலப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். நகர பகுதியில் தீபாவளி கலகலப்பு ஆரம்பித்துள்ளது.

உடுபுடைவைகள் மற்றும் பொருள்களை மலிவு விலையில் கொள்வனவு செய்வதற்கு நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் நிரம்பி வழிவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. (ஒ-51)

## பொம்மை வெளி அகதி மக்களின் குடிசைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 29

இடம் பெயர்ந்து பொம்மை வெளிகிராமத்தில் தங்கியிருக்கும் 36 குடும்பங்களின் குடிசைகள் முற்று முழுதாக தேசமடைந்துள்ளன.

இந்தக் குடிசைகளை புனரமைப்பதற்கு 1, 44, 000 ரூபா தேவை என யாழ். பிரதேச செயலகம் மதிப்பீடு செய்துள்ளது.

குடிசைகளை திருத்துவதற்கான நிதியை யாழ். பிரதேச செயலகம் மாவட்ட புனர்வாழ்வு பகுதியிடம் கோரியுள்ளது. (ஒ-17)

---

# இன்றைய விசேட கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 29

சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று சனி காலை 9.30 மணிக்கு இந்து வில் மத்தியகல்லூரியில் நடைபெறும்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிலஅளவைத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் யாழ். நாவலர் மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

உள்ளூராட்சித் திணைக்களம், வேலணை, ஊர்காவற்றுறை, நல்லூர் பிரதேச சபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 11.00 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கோரி உள்ளனர். (இ)

## மாவட்ட விளையாட்டு விழா இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். மாமட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

காலை தடகள நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இதில் வலய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

பிற்பகல் நிகழ்ச்சியாக வலைப்பந்தாட்டப் போட்டி, கரப்பந்தாட்ட (செற்றப்) போட்டி என்பன இடம்பெறும்.

வலைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

கரப்பந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் என்பன போட்டியிடுகின்றன.

இரவு நிகழ்ச்சியாக யாழ். மாவட்ட ரீதியிலானமல்யுத்த சுற்றுப் போட்டி நடைபெறும் அத்துடன் கபடி கண்காட்சிப் போட்டியும் இடம்பெறும்.

நாளைய போட்டிகளும் இதே மைதானத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 29

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனி மாலை 2.00 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ-20)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக் 24

யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வித் திட்டத்தின் கீழான மாவட்ட மகளிர் குழுப் பயிற்சி வகுப்பு இன்று சனி காலை 9.30 மணிக்கு யாழ் மணிக்கூண்டு வீதியில் உள்ள யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். இதில் ''மழைகாலத்தில் பரவும் தொற்று நோய்கள்'' பற்றி யாழ்.பல்கலைக் கழக வைத்தியக் கலாநிதி எஸ்.பி.ஆர்.சிர்மாறன் கருத்துரை வழங்குவார். [இ]

## பாப்பரசர் ஜனவரி 20 இல் இலங்கைக்கு விஜயம்

### 'கோல்பேசில்' திருநிலைப்படுத்தல்

கொழும்பு, ஒக். 29

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் இலங்கையில் விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

பரிசுத்த பாப்பரசரின் விஜயம் தொடர்பான செலவுகளுக்கென மானிய நிதியாக ஒரு கோடி 34 லட்சத்து 22 ஆயிரத்து 540 ரூபாவுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கி உள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வரவேற்புபசாரமும்காலிமுகத்திடலில் திருநிலைப்படுத்தும்சமய வைபவமும்இடம் பெறும். (ஒ-4)

# அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது!

### அரசுக்கு அந்த எண்ணம் இல்லை!!

கொழும்பு, ஒக். 29

காமினி திஸாநாயக்காவின் படுகொலையை அடுத்து பிரகடனம் செய்யப்பட்ட அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கள் ஜனாதிபதியால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமானால் அரசமைப்பின்படி பத்து தினங்களுள் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

ஆனால் அரசின் திட்டப்படி நாடாளுமன்றம் எதிர்வரும் 11ஆம் திகதியே கூடவிருக்கின்றது.

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் பெற வேண்டுமாயின் அடுத்த மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு இடம் பெற வேண்டும்.

ஆனால் விசேட அமர்வை நடத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை என்று அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

---

### காங்கிரஸ் நடுநிலைமை வகிப்பதன் பின்னணி என்ன?

# தொண்டமானின் நிபந்தனைகளை பிரதமர் சந்திரிகா நிராகரித்தார்!

கொழும்பு, ஒக். 29

முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்காமல் நடுநிலைமை வகிக்கப் போவதாக இ.தொ.கா. தலைவர் தொண்டமான் அறிவித்த தன் பின்னணிச் சம்பவங்களை ''சண்டே ஐலண்ட்'' வெளியிட்டுள்ளது.

கடந்த 20ஆம்திகதி மாலை தொண்டமான் தனது அந்தரங்க செயலாளர் திரு. திருநாவுக்கரசுடன் பிரதமர் சந்திரிகாவைச் சந்திக்க அலரி மாளிகைக்குச் சென்றிருந்தார்.

### அந்தரங்க உரையாடல்

அங்கு தொண்டமானும் சந்திரிகாவும் வேறு எவரின் உதவியுமின்றி தனித்து ஒரு மணி நேரம் வரை மனம் விட்டுப் பேசினர் என்று தெரிவிக்கப்படுகிறது. இரு தலைவர்களும் அந்தரங்கமாகப் பேசும் போது தொண்டமானின் அந்தரங்கச் செயலாளர் திருநாவுக்கரசு, சந்திரிகாவின் சமூகச் செயலாளர் திருமதி பத்மா மகாராஜாவுடன் வெளியில் பேசிக் கொண்டிருந்தார்.

## 'சண்டே ஐலண்ட்' தகவல்

பேச்சுவார்த்தையின் போது தொண்டமான் சில நிபந்தனைகளை பிரதமர் முன்னிலையில் வைத்தார்.

முதலாவது நிபந்தனை — இ.தொ.கா. வுக்கு இரண்டு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட வேண்டும். புடைவைக் கைத்தொழில் அமைச்சு மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சுக்களே அவை.

### செல்லச்சாமி விவகாரம்

இரண்டாவது நிபந்தனை — பட்டு உற்பத்தி அதிகாரசபைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் எம்.எஸ். செல்லச்சாமியை அப்பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

செல்லச்சா[illegible] வேண்டும் என்ற கோரிக்கையை பி[illegible] நிராகரித்து விட்டார் என்று ''சண்டே ஐலண்ட்'' தெரிவித்துள்ளது.

இரண்டு அமைச்சர் பதவிகளைத் தர வேண்டும் என்ற கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற முடியாதென பிரதமர் தெரிவித்து விட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னராவது அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்ற உறுதிமொழியையாவது தாருங்கள் என்று தொண்டமான் கேட்டதாகவும் — அது குறித்து உறுதியாகத் தம்மால் எதுவும் தெரிவிக்க முடியாதென்று பிரதமர் நேரடியாகக் கூறியதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த கால ஐ. தே. க அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டுகள் மொத்தமாகச் சுமத்தப்பட்டுள்ள [illegible] ரவையில் 17 ஆண்டுகளாக அ[illegible]ராக இருந்த தொண்டமானை எப்படி அமைச்சராக்குவது என்பது தான் பிரதமரின் நிலைப்பாடாக இருக்கிறது என்றும் 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

எனினும் — ஜனாதிபதித் தேர்தல் முடிந்து, மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் அமைச்சர் பதவி வழங்குவது பற்றி யோசிக்கலாம் என்றே பிரதமர் தொண்டமானிடம் தெரிவித்தார்.

இதேவேளை — ''சண்டே ஐலண்டுக்கு'' அளித்த பேட்டி ஒன்றில் — ''மலையகத்தில் இ.தொ.காவின் வாக்கு வங்கியில் 2½ லட்சம் வாக்குகளே உள்ளன என்று பத்திரிகைகள் கூறுகின்றன. எனினும் தொண்டமானுக்கு மலையகத்தில் உள்ள ஆதரவு கரைந்து கொண்டே போகிறது. ஆகவே தொண்டமானுக்குள்ள வாக்கு வங்கி பற்றி அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை ''— என்று பிரதமர் சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பத்து லட்சம் வாக்குகள் பெரும்பான்மையால் வெற்றியீட்டுவேன்'' — என்றும் சந்திரிகா தெரிவித்திருக்கிறார். (ஐ-எ)

---

### காமினியின் இறுதிக் கிரியைகளில்

## மகாநாயக்கர் இருவரின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்

கொழும்பு, ஒக். 29

மறைந்த எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவின் இறுதிக் கிரியைகளில் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கதேரர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

அரச மரியாதைகளுடன் நடத்தப்படும் இக்கிரியைகளில் கலந்து கொள்ளும்படி இவ்விரு மகாநாயக்க தேரர்களுக்கும் அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. அதற்கிணங்கவே இம்முடிவை அவர்கள் எடுத்துள்ளனர்.

இறுதிக் கிரியைகளில் மகாநாயக்கர்கள் நேரடியாகக் கலந்துகொள்வது வழக்கமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக். 29

எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் அச்சுவேலி பிரதேச சபை அலுவலகத்தில் காலை 8 30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறும். (ஒ-4)

---


**வீட்டுக்கு பழ மரங்கள் வீதிக்கு நிழல் மரங்கள்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 18 ஆவது பிறந்த நாளை நினைவு கூருகிறோம்

(29 — 10 — 1994)

பிறப்பு: 29 — 10 — 1976



அரக்கர் அழிப்பு: 22 — 05 — 1994

### அமரர் சின்னத்தம்பி சிவதர்சினி

[யாழ். / வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி (கணிதம் 1995)]

அன்பும், பண்பும், பாசமும், அமைதியும் ஒருங்கே அமைந்த என் ஆருயிர் அருமை மகள், ஏகபுத்திரி சிவதர்சினியே!! இன்று உன் பிறந்தநாளை நினைத்து, அன்னையவள் நான் பெற்றமனம் பித்தாகி, நான் விடும் கண்ணீர், உன் சாந்திக்கு காணிக்கையாகும் பன்னீர்.

அன்பே! இல்லறச் சோலையிலே சந்தோசத் தென்றலாக வந்த முத்தான என் செல்வமே! எம்முடன் நிழல்போல் பாசமாக வாழ்ந்து விட்டு பாதியிலே கொடியரக்கன் விமானக் குண்டுபட்டு உன் அப்பாவையும் கூட்டிச் சென்றாயோ இது நியாயமா? நெஞ்சம் உருகுதம்மா. நெஞ்சு இருக்கும் வரை சுமை தீருமோ.

என் பாசமலரே! கல்வியிலே உனக்கு நிகரில்லையம்மா நீ. செல்வத்திலும் எளிமையான வாழ்க்கையைக் கைக்கொண்டாய். பிறந்ததில் இருந்து 05-03-94 வரை என்னுடன் ஒரே கட்டிலில் குழந்தையாய் உறங்கினாயே. 05-03-94 இல் இருந்து 21-05-94 வரை பருவப் பெண்ணாக பிரிந்து உறங்கினாயே. அணையாத தீபமே உனது மாற்றத்தை இனம் காணும்போது 22-05-94 இல் எம்மைவிட்டு ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொள்வாய் என்று அன்று நான் கண்டேனா.

விளக்கேற்ற வந்தவளே நொடிப் பொழுதும் உன் திருமுகம் என்னைவிட்டு அகலாதிருக்க இப் பெற்ற மனதுக்கு நீங்காத தரிசனம் தருவாயோ.

உங்கள் பிரிவால் துயருறும்
அருமை மாதா;
சிவகாமியம்மா.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(33508)

---

## மரண அறிவித்தல்

### மருதையினார் கந்தையா

[நாரந்தனை வடக்கு]

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட மருதையினார் கந்தையா 28 - 10 - 94 [வெள்ளி] கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மருதையினார் சிவகாமிபிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா தங்கரெத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், ஞானேந்திரன், சகேந்திரன், [பிரான்ஸ்], கஜேந்திரன் [ஹொலண்ட்], மகேந்திரன் [விரிவுரையாளர் விவசாயபீடம் கிளிநொச்சி], ரவீந்திரன், தெய்வேந்திரன், வாகீசன், பாலேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திரகலா, ஜசிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகவதி, சின்னம்மா, காலஞ்சென்ற அன்னம், மற்றும் குணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. வாகீசன்
[மகன்]

28, மணல்தறை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[33561]

---


தீபாவளி திருநாளை முன்னிட்டு
நியூ ஹப்பி ரெக்ஸ்ற்
வழங்கும்
மாபெரும்
மலிவு விற்பனை
இன்றே நாடுங்கள்!
புதிய மகிழ்ச்சி ஆடையகம்
(நியூ ஹப்பி ரெக்ஸ்ற்)
146, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்
(சி-9533)



தீபாவளி
மலிவு விற்பனை
★ கஸியோ (Casio)
★ சிற்றிசன் (Citizen)
கைக் கடிகாரங்கள்!
மலிவு விற்பனை!!
01 - 11 - 1994 வரை
★ அல்டி ★
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9448)


### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்துக்கு இடமான இளைஞர்கள், யுவதிகள் மேல் விசாரணைக்காக படையினரால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

விடுதிகளுக்குச் செல்லும் படையினர் விடுதி உரிமையாளர்கள் பராமரிக்கும் பதிவேடுகளையும் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த தினத்தன்று விடுதிகளில் இருந்து வெளியேறியோரின் விபரங்களையும் படையினர் சேகரித்து வருகின்றனர்.

இதேவேளை—

கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து குண்டு வெடிப்புச் சம்பவ தினம் ஒரு ஆணும், பெண்ணும் வெளியேறிச் சென்றிருப்பது படையினருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடு செல்வதற்காகத் தாங்கள் கொழும்புக்கு வந்ததாக அவர்கள் இருவரும் கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவர்கள் இருவரும் உண்மையில் வெளிநாடு சென்றுவிட்டார்களா என்பதை அறிவதில் ரகசியப் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

### தேர்தல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வமாக விலகிக் கொண்டுள்ளார். எனினும் வாக்குச் சீட்டுகளில் அவரது பெயரும் காணப்படும். இதனை வாக்காளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்— என்று தேர்தல் ஆணையாளர் — தெரிவித்துள்ளார். (ஐ)

## புலிகளுக்கு ஏற்ற நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிபரப்பு!

### முஹம்மது குற்றம் சாட்டுகிறார்

கொழும்பு, ஒக். 29

ரூபவாஹினி கூட்டுத்தாபனம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்ற விதத்தில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.தே.கதலைமை அலுவலகம் முன்பு ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் வன்செயல் இல்லையா என்று கேட்ட போது அவர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

ரூபவாஹினி ஊழியர்கள் தாக்கப்படவில்லை, விடுதலைப் புலிகளுக்கு ஏற்ற விதத்தில் நிகழ்ச்சிகளை ரூபவாஹினி காட்டுகிறது. வடபகுதி வழமைக்குத் திரும்பிவிட்டதாக காட்டப்படுகிறது. இது விடுதலைப்புலிகளின் பலத்தை தென்பகுதி மக்களுக்குக் காட்டும் ஓர் அச்சுறுத்தலாகும்.

—இவ்வாறு ஜனாப் முஹம்மது மேலும் தெரிவித்தார்.

### பேச்சாளர்களை இழந்துவிட்டது ஐ. தே. க.!

கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதல் சம்பவத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி பல முக்கிய பேச்சாளர்களை இழந்து விட்டது.

ஐ. தே. க. உதவிப் பொருளாளர் சுசில்முனசிங்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

### ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராக

## சிறிமாவின் பெயரை அனுரா ஆமோதித்தார்

கொழும்பு, ஒக். 29

ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு சிறிமா திஸாநாயக்காவின் பெயரை ஐ. தே. க. உதவிப் பொருளாளர் சுசில் முனசிங்காவே பிரேரித்தார். அதனை அனுரா பண்டாரநாயக்கா வழிமொழிந்தார்.

ரணில் விக்கிரம சிங்காவின் பெயரை நந்தா மத்தியூ முன்மொழிய காமினி அத்துக்கோறளை வழிமொழிந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வேட்பாளர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன் வைக்கப்பட்டதை அடுத்துபோட்டியின்றி வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று சிலர் யோசனை தெரிவித்தனர்.

இதனை ஐ. தே. க. செயற்குழு ஏற்றுக் கொண்டு மூன்று பேர் குழு ஒன்றை நியமித்தது. அக்குழுவே சிறிமா திஸாநாயக்காவை ஜனாதிபதிவேட்பாளராக நியமிப்பது என்று முடிவு செய்தது. (ஒ—எ)


மலிவு விற்பனை வாரம்
24 — 10 — 1994 — 30 — 10 — 1994
★ கேர் (f) போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்
★ பெனியன்கள் ★ தையல் நூல் வகைகள்
★ எலாஸ்டிக் வகைகள் ★ பட்டிகள்
மற்றும் புடைவை வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிறி முருகன் ★
303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
[33433]



யாழ். மாவட்ட
விளையாட்டு அபிவிருத்திக்குழு
நடத்தும்
விளையாட்டு விழா — 1994
இன்றும் நாளையும் -- பகலிலும் இரவிலும்
யாழ். மருத்துவபீட மைதானத்தில்
இன்று காலை 8.30 மணி முதல் — தடகள போட்டிகள்
மாலை 4.00 மணி முதல் — வலைப்பந்தாட்டம்
— கரப்பந்தாட்டம்
மாலை 6.00 மணி முதல் — மல்யுத்தப் போட்டிகள்
— கராத்தே கண்காட்சி
— தாச்சிப் போட்டிகள் (ஆண்/பெண்)
நாளை காலை 7.00 மணி முதல் — கோழிச்சண்டை
8.30 மணி முதல் — தடகள போட்டிகள்
— கிறீஸ்மரம் ஏறுதல்
— கயிறு இழுத்தல்
மாலை 4.00 மணி முதல் — உதைபந்தாட்டம்
மாலை 6.00 மணி முதல் — மல்யுத்தம்
— தாச்சிப் போட்டிகள் (ஆண்/பெண்)
— கபாடி போட்டி
— கராத்தே கண்காட்சி
அனைவரும் வருக.
(சி/9561)



மாதாந்த அறிவியல் அரங்கு - 8
காலம்; 30-10-94 ஞாயிறு பிற்பகல் 3. 00மணி
இடம்: உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
தலைப்பு: "ஆளுமை விருத்தி"
நிகழ்த்துபவர்: அருட்திரு டேமியன் அடிகள் (உளவியல் விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்)
அறிவுத்தேடல் மிக்கோர் வருக!
—நூலக அபிவிருத்திச்சபை.
சாவகச்சேரி பிரதேச சபை,
மிருசுவில் பொது நூலகம்'
உசன், மிருசுவில்.
பிரசுர அன்பளிப்பு:
கல்யாணி தங்கமாளிகை
189A, சந்தோசம் (கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.
(சி/9551)



கலைச் செம்மல் செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய தமிழர் வீரவரலாற்றை எடுத்தியம்பும்
"ஆனையை அடக்கிய அரியாத்தை" நூல் வெளியீட்டு விழா
நாளை (ஞாயிறு) பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்
தலைவர்: திரு. தி. சபாரத்தினம் (கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)
அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், உயர் அதிகாரிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த நூல் வெளியீட்டு விழாவில்
★ கூத்திசைப் பாட்டு ★ பரதநாட்டியம் ★ ஒயிலாட்டம் ★ வசந்தன் கூத்து (கோலாட்டம்)
ஆகிய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கலாம்!
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
★ குறுகிய கால அவகாசத்தினால் தனித் தனியான அழைப்புகள் அனுப்ப முடியவில்லை. இதனை அழைப்பாக ஏற்று சகலரையும் சமுகம் தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.
இந்நிகழ்வு சிறப்புற வாழ்துபவர்கள்:
வன்னி பெரு நிலப்பரப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில
கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
(சி-9550)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் [illegible] வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org